**சுதேச வைத்திய அமைச்சு**

# ஆயுர்வேத வைத்திய சபை

## வருடாந்த அறிக்கை - 2014

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| ஆயுர்வேத வைத்திய சபையின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி | 4 |
| இலக்குகள், ஆயுர்வேத வைத்திய சபையின் அறிமுகம், செயலாற்றுகை மற்றும் பொறுப்பு. | 5 |
| ஆயுர்வேத வைத்திய சபையின் நிர்வாகக் கட்டமைப்பு | 6 |
| ஆயுர்வேத வைத்திய சபையின் உறுப்பினர்கள் - 2014 | 7 |
| நிதி ஏற்பாடு | 8 |
| கொள்கை வகுத்தலும் மேலதிக தகைமைகளும் | 9 |
| நுண்ணாய்வுகள் மற்றும் விசேட மருத்துவ சபைகள் | 9 -10 |
| ஆயுர்வேத வைத்தியர்களைப் பதிவு செய்தல் மற்றும் ஆயுர்வேத மருந்தாளர்களைப் பதிவு செய்தல், சட்ட வாக்கியங்களினை வகுத்தமைத்தல், “ஹெல வெத ருவநார” நிகழ்ச்சித் திட்டங்கள். | 11 - 15 |
| ஆயுர்வேத சபையின் பதவியணியினர் மற்றும் வலையமைப்பு | 15 |
| 2014 ஆம் ஆண்டில் ஆயுர்வேத வைத்திய சபையினால் எடுக்கப்பட்ட மற்றும் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களுக்கு இணங்க நடைமுறைப்படுத்தப்பட்ட ஏனைய நடவடிக்கைகள். | 16 - 18 |
| 2014 வரவு செலவு அறிக்கை | 19 -21 |
| 2014 ஐந்தொகை | 22 - 23 |
| 2014 காசுப்பாய்ச்சல் கூற்று | 24 - 25 |
| கணக்காய்வாளர் அறிக்கை | 26 - 34 |
| கூட்டுத்தாபன விபரங்கள் | 35 |
| நன்றி | 36 |

**தொலை நோக்கு**

தொழில்சார் தரத்தின் மூலமாகவும் மற்றும் அபிமானத்தை பாதுகாப்பதன் மூலமாக இலங்கை ஆயுர்வேத சேவையின் அதி உண்ணத நிறுவனமாக உயர்த்துதல்.

**செயற்பணி**

தொழில்சார் திறன்கள், ஒழுக்கம் மூலமாக பொது மக்களுக்கு ஆக்கக்கூடிய ஆயுர்வேத சேவையை வழங்கும் அதே வேளையில் ஆயுர்வேதத்துறையில் பண்பு சார்ந்த அபிவிருத்தி பொருட்டுத் தேவைப்படும் சட்ட அடிப்படையை பாதுகாத்தல்.

**குறிக்கோள்**

1961 இன் 31ம் இலகக ஆயுர்வேத சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய ஆயுர்வேத துறையின் பண்பை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய அறிவு, திறமை மற்றும் அனுபவம் என்பவற்றுடன் துறை சார்ந்தவர்களிற்கு சட்டபூர்வமான அதிகாரத்தை வழங்குதல் மற்றும் தொழில் கௌரவத்தை மற்றும் தொழில் பண்பை பாதுகாத்தல்.

**இலக்குகள்:-**

- ❖ 1961 இன் 31 ம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் வைத்திய சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை அமூல்படுத்தல்.
- ❖ ஆயுர்வேத துறையின் தொழில்சார் திறன்களை மேம்படுத்துவதற்கு தராதர அளவுகளை தீர்மானித்தல் மற்றும் நடாத்திக் கொண்டு செல்லுதல்.
- ❖ ஆயுர்வேதத்துறை தொழில்சார்ந்தவர்களின் நன்நடத்தை செயற்திறன் உள்ளதாக நடாத்துவதற்கு வேணடிய ஒழுங்கு விதிகள் மற்றும் தரத்தை நடைமுறைப்படுத்தல்.
- ❖ ஆயுர்வேத துறையில் தொழில் சார்ந்த நன்நடத்தைகள் தீர்மானித்தல் மற்றும் நிர்வகித்தல்.
- ❖ ஆயுர்வேத வைத்திய சபையின் வழங்கள் மற்றும் வசதிகள் நாளது வரையாக்கம் மூலமாக அதன் திறன்களை அபிவிருத்தி செய்தல்.

**1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேதச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஆயுர்வேத வைத்திதிய சபையின் அறிமுகமும் முதன்மைத் தொழிற்பாடுகளும் பொறுப்புகளும்.**

**நியதிச்சட்ட விபரம் :-**

1927 ஆண்டின் தேசிய அரசுப் பேரவை துணைச் சபை விதந்துரைப்பின் பேரில் 1928 இல் ஸ்தாபிக்கப்பட்ட சுதேச வைத்திய சபை இலங்கை ஆயுர்வேத வரலாற்றில் முதற் சட்ட முறை ஆட்சி உரிமை கொண்ட நிருவனமானது. பின் 1935 இன் 46 ஆம் இலக்க லங்காயுர்வேத வைத்திய சாசன சபை கட்டளைச் சட்ட மூலம் அமைக்கப்பட்ட வைத்திய சபை 1941 ம் 17 இலக்க சுதேச வைத்திய கட்டளைச் சட்டத்தின் ( 1945 இன் இலக்க 49 மற்றும் 1949 இன் 49 இலக்க ஊடாக திருத்தப்பட்ட) கீழ் மீள் நிர்மானிக்கப்பட்டது. தற்போது நடைமுறையிலுள்ள ஆயுர்வேத வைத்திய சபை 1961 ஆண்டின் 31 ம் இலக்க ஆபுர்வேதச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பபட்ட நியதிச்சட்ட நிறுவனமாகும்.

அ. இந்தச் சட்டத்தின் நோக்கத்தின் பொருட்டு ஆயுர்வேதத்தினைக் கற்பித்தலுக்காக ஏதாவது நிறுவனத்திற்கு அங்கீகாரம் வழங்க வேண்டுமா என்று அமைச்சருக்கு விதந்துரைப்பினைச் செய்தல்.

ஆ. ஆயுர்வேத மருத்துவர்களாகப் ஆட்களின் பெயர்களைப் பதிவு செய்தல்.


இ. ஆயுர்வேத மருந்துக் கலவையாளர்களாகப் ஆட்களின் பெயர்களைப் பதிவு செய்தல்.

ஈ. ஆயுர்வேத கவனிப்பாளராகப் ஆட்களின் பெயர்களைப் பதிவு செய்தல்.

உ. அத்தகைய பதிவுகளைப் இரத்துச் செய்தல் அல்லது இடைநிறுத்தி வைத்தல்.

ஊ.
1. ஆயுர்வேத மருத்துவர்கள், ஆயுர்வேத மருந்துக் கலவையாளர்கள், மற்றும் ஆயுர்வேத கவனிப்பாளர்கள் போன்றவர்களின் தொழில்சார் நடத்தைகளை ஒழுங்குபடுத்தலும், கட்டுபடுத்தும் பொருட்டு.
2. இப்பிரிவிலுள்ள (ஆ) தொடக்கம் (உ) வரை குறிப்பீடு செய்யப்படும் ஏதாவது விடயங்கள் பொருட்டு சட்டவாக்கங்களை வகுத்தமைத்தல்.

**ஆயுர்வேத வைத்திய சபையின் நிர்வாகக் கட்டமைப்பு அங்கத்தவர்கள் எண்ணிக்கை**



## 2014 ம் ஆண்டின் 17 மற்றும் 18 வது வைத்திய சபையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஆயுர்வேத ஆணையாளர் - திரு.பீ.எஸ்.கே.ஆர்.வீரகோன் | தலைவர் |
| 2. | கலாநிதி திரு.டீ.ஜே.யு.புரசிங்க | உப தலைவர் |
| 3. | வைத்தியர் திரு.ஆர்.எல்.ரணசிங்க | பதிவாளர் |
| 4. | வைத்தியர் திருமதி. டப்.எம்.எஸ்.ஜே.குமாரி<br>பணிப்பாளர், தேசிய வைத்திய நிறுவகம் | உறுப்பினர் |
| 5. | பேராசிரியர் திருமதி ஜனிதா ஏ.லியனகே<br>பணிப்பாளர், கம்பஹ விக்ரமாரச்சி ஆயுர்வேத வைத்திய நிறுவனம் (2014.05.31 வரை) | உறுப்பினர் |
| 6. | சிரேஸ்ட விரிவுரையாளர் வைத்தியர் டி.பீ.ஏ.திசாநாயக்க (2014.05.31 வரை) | உறுப்பினர் |
| 7. | சிரேஸ்ட விரிவுரையாளர் வைத்தியர் ரீ.டி.என்.கருணாரத்ன (2014.05.31 வரை) | உறுப்பினர் |
| 8. | வைத்தியர் திரு.எஸ்.எச்.எம்.சேனபண்டா | உறுப்பினர் |
| 9. | வைத்தியர் திரு.சந்திரசிரி விதானாரச்சி | உறுப்பினர் |
| 10. | திரு.எம்.எம்.ஏ.தேவ் சிறிவர்தன | உறப்பினர் |
| 11. | வைத்தியர் திரு.ஈ.எம்.பி.பீ.ஏகநாயக | உறுப்பினர் |
| 12. | வைத்தியர் திரு.எம்.எம்.ஏ.கே.அமரசிங்க | உறுப்பினர |
| 13. | வைத்தியர் திரு.சுனில் சாந்த விஜேதுங்க (2014.05.31 வரை) | உறுப்பினர் |
| 14. | வைத்தியர் திரு.எம்.செய்நுதீன் (2014.05.31 வரை) | உறுப்பினர |
| 15. | வைத்தியர் எம்.எம்.கே.மாலிங்காவ | உறுப்பினர் |
| 16. | வைத்தியர் டப்.டி.குமார (2014.06.01 தொடக்கம்) | உறுப்பினர் |
| 17. | வைத்தியர் எஸ்.ஜெயந்தன் (2014.06.01 தொடக்கம்) | உறுப்பினர் |
| 18. | வைத்தியர் திருமதி ஐ.ஜீ.பி.ஆர்.குலநாத (2014.06.01 தொடக்கம்) | உறுப்பினர் |
| 19. | வைத்தியர் எம்.எச்.எம்.நசீம் (2014.06.01 தொடக்கம்) | உறுப்பினர |
| 20. | கலாநிதி கே.கே.டி.எஸ்,ரணவீர (2014.06.01 தொடக்கம்) | உறுப்பினர் |
| 21. | திறைசேரி கண்காணிப்பாளர் திருமதி எம்.ஆர்.ஆர்.அபேவிக்ரம<br>பணிப்பாளர், அரச நிதித் திணைக்களம் (2014.05.31 வரை) | உறுப்பினர் |
| 22. | திறைசேரி உத்தியோகத்தர் சீ.எச்.ரணதுங்க (2016.06.01 தொடக்கம்)<br>பணிப்பாளர், அரச நிதித் திணைக்களம். | |

இந்த ஆண்டில் 09 வைத்திய சபைக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

## ஆயுர்வேத வைத்திய சபையின் செயற் திறன் - 2014

### 01.நிதி ஏற்பாடு :-


2014 ஆம் ஆண்டு பொருட்டு ஆயுர்வேத வைத்திய சபைக்கு ரூபா ஐம்பது இலட்சம் (7,000,000/-) நிதி அரச கொடையாக பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆயுர்வேத வைத்திய சபையிற்கு பல்வேறு பிரிவுகளினாலும் கிடைக்கப் பெற்ற வருமானம் ரூ.5,503,344/- ஆகவும் செலவினம் ரூ.9,126,977/- இருந்தது. 2014 ஆம் ஆண்டில் ஆயுர்வேத மருத்துவ சபையின் செயற் திறன் குறித்த அறிக்கை ஒனறு வருமான செலவினக் கணக்கிலும் 2014.12.31 இல் உள்ளவாறான சபையின் நிதி நிலைமையை ஐந்தொகையில் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் காசுப்பாய்சல் அறிக்கையில் 2014 இல் சபையின் காசு உட்பாய்சல் மற்றும் வெளிப்பாய்சல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**வருடாந்த வரவு, செலவு, மற்றும் அரச கொடைகள்**

| விடயம் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| அரச கொடைகள் | 6,000,000 | 3,900,000 | 4,700,000 | 5,000,000 | 7,000,000 |
| கிடைக்கப் பெற்ற ஏனைய வருமானங்கள் | 2,205,626 | 1,900,665 | 2,361,369 | 4,423,774 | 5,503,344 |
| மொத்த வருமானம் | **8,205,626** | **5,800,665** | **7,061,369** | **9,423,774** | **12,503,344** |

2010 ம் ஆண்டு தொடக்கம் 2014 ம் ஆண்டு வரையான ஆயுர்வேத வைத்திய சபையின் வரவு செலவு தொடர்பான விபரம் கீழே வரைபு மூலமாக காட்டப்பட்டுள்ளது.



## 02.கொள்கை வகுத்தமைத்தல்:-

2014 இல் ஆயுர்வேத வைத்திய சபையில் பின்வரும் நிலையான உப குழுக்கள் தொழிற்பட்டன. அவையாவன.

- பரீட்சை கட்டுப்பாட்டுச் சபை – நிலையான உபகுழு
- தண்டங்கள் தொடர்பான செயற் குழு _ நிலையான உபகுழு.

**பரீட்சை கட்டுப்பாட்டுச் சபை – நிலையான உபகுழு**

பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவர்களை பதிவு செய்தல் பொருட்டு எழுத்துப் பரீட்சை ஒன்று பரீட்சைக் கட்டுபாட்டுச் சபையின் முழு மேற்பார்வையின் கீழ் 2014 நவம்பர் மாதம் 01 மற்றும் 02 ஆம் திகதிகளில் பொரளை சுசமயவர்தன வித்தியாலயத்தில் நடாத்தப்பட்டது.

**2010 தொடக்கம் 2014 வரை பரம்பரிய ஆயுர்வேத வைத்தியர்களைப் பதிவு செய்வதற்காக சபையினால் நடாத்தப்பட்ட எழுத்துப் பரீட்சை**

| விடயம் | 2010 ஆண்டு | 2011 ஆண்டு | 2012 ஆண்டு | 2013 ஆண்டு | 2014 ஆண்டு |
|---|---|---|---|---|---|
| வருடாந்த எழுத்துப் பரீட்சைக்காக அழைக்கப்பட்ட விண்ணப்தாரர்களின் எண்ணிக்கை. | 402 | 319 | 231 | 373 | 386 |
| வருடாந்த எழுத்துப் பரீட்சைக்கு கலந்து கொண்ட விண்ணப்தாரர்களின் எண்ணிக்கை. | 296 | 193 | 151 | 293 | 297 |
| வருடாந்த எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்தாரர்களின் எண்ணிக்கை. | 110 | 53 | 51 | 97 | - |
| எழுத்துப் பரீட்சையில் மீள் அமர்வு விண்ணப்தாரர்களின் எண்ணிக்கை. | 49 | 61 | 40 | 79 | - |
| **பங்கு பற்றிய விண்ணப்தாரர்கள் சித்தியடைந்தவர்களின் சதவீதமாக** | 37.16% | 27.46% | 33.77% | 33.10% | **பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை.** |

**தண்டங்களின் விதிப்பனவு தொடர்பான செயற்குழு – நிலையியற் உப குழு**

தண்டங்களினை விதிப்பனவு செய்தல் தொடர்பான செயற்குழு 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேதச் சட்டத்தின் 10, 18 மற்றும் 82 ஆம் பிரிவுகளின் நியதிகளின் படி ஆயுர்வேத ஒழுங்கு விதிகளுக்கு (ஒழுக்காற்று) தாபிக்கப்பட்ட ஒரு நிலையியற் குழுவாகும். இவ்விடயம் தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை 1973.01.04 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இது சதாராண ஒழுக்காற்று விசாரணையினைப் பார்க்கிலும் மிகவும் சிக்கலானதும் பொறுப்பான சட்ட ஒழுங்கு முறைகளையும் கொண்டதாக உள்ளது. 2014 ஆம் ஆண்டில் தண்டங்கள் தொடர்பான செயற்குழுவிற்கு சமர்ப்பிற்பதற்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெறவில்லை.

**03. பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களின் மேலதிக தகைமைகளை தீர்மானித்தல் பொருட்டான உபகுழு.**

1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேதச் சட்டத்தின் 62 வது பிரிவின் நியதிகளின் படி எவரேனும் ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்ட பின்னர் தனது தொழில் சார்புற்ற ஏதேனும் மேலதிக தகைமையை சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பேரில், ஆயுர்வேத பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு தத்துவங்களைக் கொண்டிருக்கின்றார். அதன்படி அம் மேலதிக தகைமை அவருடைய பெயருடனும் அவரின் தொழில் முயற்சியுடன்

சேர்த்து ஈடுபடுத்துவதற்கும், அத்தகைய மேலதிகத் தகைமையின் பொருட்டு சபையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றினை வைத்திருப்பதற்கும் சட்ட உரித்தினை அவருக்கு கொடுக்கப்படுகின்றது. ஆயுர்வேத வைத்திய சபையின் தீர்மானத்தின் படியும் இந்த சட்ட திட்டங்களின் ஏற்பாடுகளின் படியும் மேலதிக தகைமைகளினைப் பதிவு செய்தல் ஆரம்பிக்கப்பட்டதுடன், இது தொடர்பாக உரியவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

| விடயம் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| மேலதிக தகைமைகள் உள்ளடக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்ட எண்ணிக்கை. | 05 | 09 | 04 | 03 | 03 |

## 03. <u>நுண்ணாய்வுகள் :-</u>

ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களின் தொழில்சார் துர்நடத்தைகள் தொடர்பாகவும், பதிவு செய்யப்படாமல் வைத்தியர்களாக செயற்படுவோர் தொடர்பாகவும், கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு சட்ட நடவடிக்குகள் ஏற்பாடு செய்வதற்காக பொது மக்கள் முறைப்பாடுகள் நுண்ணாய்வுக் கூறு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கூறின் பிரதான நோக்கம் ஆயுர்வேத மருத்துவத்தின் ஒழுங்கீனங்கள், தொழில்சார் துர்நடத்தைகள், ஒழுக்கக்கேடான செயற்பாடுகள் போன்றவற்றை நுண்ணாய்வு செய்தல். இந்தச் செயற்பாடுகள் பத்திரிகைகள் முறைப்பாடுகள், பொதுமக்கள் முறைப்பாடுகள் போன்ற பகுதிகளின் கீழ் சபையினால் நுண்ணாய்வு செய்யப்படுகின்றன.

| விடயம் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| நுண்ணாய்வு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை. | 08 | 14 | 04 | 14 | 39 |

## 04. <u>விசேட வைத்திய விசாரணைச் சபைகள்</u> :-

அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிகின்ற உத்தியோகத்தர்களிற்கு, ஆயுர்வேத வைத்தியர்களினால் வழங்கப்படுகின்ற வைத்திய சான்றிதழ்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் xxvi ம் அத்தியாயத்தில் 4 ஆம் பிரிவின் படி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற வைத்திய விசரணைச் சபையின் ஒருப்பாட்டுடன் ஆயுர்வேத வைத்திய சான்றிதழ்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்ட விசேட வைத்திய விசரணைச் சபை நடாத்தப்பட்டது. அவை தொடர்பாக அவதானிக்கையில் ஒவ்வொரு நிறுவனத்தின் ஊடாகவும் பொது 142 படிவத்தின் மூலம் நிரப்பி அனுப்பபடுகின்றது.

| விடயம் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட விசேட வைத்திய விசாரணைகள் எண்ணிக்கை. | 08 | 14 | 04 | 14 | 39 |

05. <u>சட்டத்தின் 55(1) மற்றும் 55(2) வது பிரிவுகளின் கீழ் ஆயுர்வேத மருத்துவர்களினைப் பதிவு செய்தல்:-</u>

ஆயுர்வேத வைத்திய சபை பின்வரும் அடிப்படைக் கோட்பாடுகளினைப் ஆதாரமாகக் கொண்டு ஆயுர்வேத வைத்தியர்கள் பதிவு செய்யப்படுகின்றது.

- அரசாங்கம் ஏற்றுக்கொண்ட பட்டதாரிகள், டிப்ளோமாதாரிகள் மற்றும் அரசு ஏற்றுக் கொண்ட சான்றிதழ் வைத்திருக்கின்ற வைத்தியர்கள் கல்வித் தகைமைகளுக்கு ஏற்ப பதிவு செய்தல்.

- தகுதிகளைப் பெற்ற பாரம்பரிய வைத்தியர்கள் ஆயுர்வேத வைத்திய சபையினால் தாபிக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்களிற்கு அமைய நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகள் மற்றும் விதந்துரைப்பின் பேரில் பதிவு செய்யப்படல்.

பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் தர வரிசைப்படுத்தப்படுவதுடன், இதில் சித்தி அடையத் தவறியவர்கள் அவர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளை கருத்திற் கொண்டு மூன்று மாதங்கள், ஆறு மாதங்கள், ஒரு வருடம் என கணிப்பீட்டு காலப்பகுதிக்கு உற்படுத்தி மீளவும் மற்றுமொரு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கபடுவார்கள்.

2014 இன் வருட இறுதியில் 24049 ஆயுர்வேத வைத்தியர்கள் ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவு செய்து கொண்டுள்ளனர். இவ் வருடத்தில் 445 ஆயுர்வேத வைத்தியர்கள் பின்வரும் பகுதிக்கு அமைவாக பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

**2010 தொடக்கம் 2014 வரை பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியர்களைப் பதிவு செய்வதற்காக சபையினூடக நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகள் தொடர்பான விபரம்.**

| விடயம் | 2010 ஆண்டு | 2011 ஆண்டு | 2012 ஆண்டு | 2013 ஆண்டு | 2014 ஆண்டு |
|---|---|---|---|---|---|
| வருடாந்தம் நடாத்தப்பட்ட நேர்முகப பரீட்சைகளின் எண்ணிக்கை. | 27 | 26 | 20 | 29 | 31 |
| வருடாந்தம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை. | 450 | 404 | 386 | 461 | 362 |
| வருடாந்தம் நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளித்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை | 315 | 315 | 290 | 355 | 296 |
| நேர்முகப் பரீட்சையினூடாக பதிவு செய்வதற்கு தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை. | 140 | 85 | 136 | 182 | 221 |
| சமூகமளித்தவர்கள் சித்தி பெற்றவர்களின் சதவீதமாக. | 44.44% | 26.98% | 46.90% | 51.27% | 74.667% |



**2010 தொடக்கம் 2014 வரை ஆயுர்வேத வைத்திய சபையின் வருடார்ந்த பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்கள்.**

| விடயம் | 2010 வருடத்தில் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | 2011 வருடத்தில் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | 2012 வருடத்தில் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | 2013 வருடத்தில் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | 2014 வருடத்தில் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| **பொது (சர்வாங்க)** | | | | | |
| **பட்டதாரிகள்** | **161** | **162** | **135** | **137** | **132** |
| ஆயுர்வேத வைத்திய மற்றும் சத்திர சிகிச்சைமானி பட்டதாரிகள் - கொழும்பு பல்கலைக்கழகம் | 85 | 78 | 80 | 67 | 71 |
| ஆயுர்வேத வைத்திய மற்றும் சத்திர சிகிச்சைமானி பட்டதாரிகள் - களனி பல்கலைக்கழகம் | 39 | 61 | 25 | 47 | 30 |
| யுனானி வைத்திய மற்றும் சத்திர சிகிச்சைமானி பட்டதாரிகள் - கொழும்பு பல்கலைக்கழகம் | 24 | 20 | 19 | 17 | 16 |
| சித்த வைத்திய மற்றும் சத்திர சிகிச்சைமானி பட்டதாரிகள் - யாழ்ப்பாண பல்கலைக்கழகம் | 13 | 03 | 11 | 06 | 12 |
| ஆயுர்வேத வைத்திய மற்றும் சத்திர சிகிச்சைமானி பட்டதாரிகள் - இந்தியா | - | - | - | - | 03 |
| **டிப்ளோமாதாரிகள்** | **91** | **89** | **95** | **76** | **54** |
| டீ.ஏ.எம்.எஸ் | - | - | - | - | - |
| சித்தாயுர்வேதஞ்ஞுலாபின் -கம்பஹ விக்ரமாரச்சி வித்தியாலயம் | - | - | - | - | - |
| ஆயுர்வேத சாஸ்திரி | 90 | 77 | 84 | 72 | 54 |
| யாழ்பாண சித்த வித்தியாலயத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தி | 01 | 12 | 11 | 04 | |
| **பாரம்பரியம் – சர்வாங்க** | **75** | **30** | **45** | **45** | **86** |
| பாரம்பரியம் | 75 | 30 | 45 | 45 | 86 |
| **பாரம்பரியம் - விசேட** | **148** | **68** | **85** | **90** | **178** |
| பாம்புக்கடி | 38 | 29 | 27 | 26 | 49 |
| முறிவுதறிவு | 72 | 30 | 44 | 47 | 92 |
| கண் நோய் | 04 | 02 | 01 | 01 | 05 |
| சர்ம ரோகம் | 09 | 02 | 01 | 07 | 07 |
| கட்டி புண் | 10 | 01 | 05 | 04 | 08 |
| விசர் நாய்க் கடி | 01 | - | - | 01 | 02 |
| அக்கினி புண் | 05 | 01 | 02 | 02 | 01 |
| மன நோய் | 09 | 03 | 05 | 02 | 09 |
| **முழுத் தொகை** | **475** | **349** | **360** | **348** | **450** |

**2014. 12.31 ம் திகதிக்கு ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த ஆயுர்வேத வைத்தியர்கள் எண்ணிக்கை**

| **விடயம்** | 2014.12.31 க்கு பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|
| பொது (சர்வாங்க) | |
| பட்டதாரிகள் | 2378 |
| ஏல்.ஏ.எம்.எஸ் - கல்கடா | 52 |
| எவ்.எம்.பீ.எஸ் - அலஹமாபாத் | 04 |
| ஆயுர்வேத வைத்திய மற்றும் சத்திர சிகிச்சைமானி பட்டதாரிகள் - கொழும்பு பல்கலைக்கழகம் | 1194 |
| ஆயுர்வேத வைத்திய மற்றும் சத்திர சிகிச்சைமானி பட்டதாரிகள் - களனி பல்கலைக்கழகம் | 412 |
| யுனானி வைத்திய மற்றும சத்திர சிகிச்சைமானி பட்டதாரிகள் - கொழும்பு பல்கலைக்கழகம் | 350 |
| சித்த வைத்திய மற்றும் சத்திர சிகிச்சைமானி பட்டதாரிகள் - யாழ்ப்பாண பல்கலைக்கழகம் | 358 |
| ஆயுர்வேத வைத்திய மற்றும் சத்திர சிகிச்சைமானி பட்டதாரிகள் - இந்தியா | 08 |
| டீப்ளோமாதாரிகள் | 5154 |
| டீ.ஜ.எம்.எஸ் - சுதேச வைத்திய நிறுவகம்- கொழும்பு | 482 |
| டீ.ஏ.எம்.எஸ் - சுதேச வைத்திய நிறுவகம்- கொழும்பு | 1262 |
| டீ.எஸ்.ஏ.சீ – கம்பஹ விக்கிரமாராச்சி வைத்திய நிறுவகம் | 1166 |
| டீ.ஏ.எஸ்.சீ – கம்பஹ விக்கிரமாராச்சி வைத்திய நிறுவகம் | 173 |
| எல்.ஏ.எம் - யாழ்ப்பாணம் சித்த வித்தியாலயம் | 56 |
| டீ.எஸ்.ஏ.எம்.எஸ - கம்பஹ விக்கிரமாராச்சி வைத்திய நிறுவகம் | 568 |
| ஆயுர்வேத சாஸ்திரி | 1343 |
| யாழ்பாண சித்த வித்தியாலயத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தி | 104 |
| பாரம்பரியம் – சர்வாங்க | 5471 |
| பாரம்பரியம் | 5471 |
| பாரம்பரியம் - விசேட | 8507 |
| பாம்புக்கடி | 3543 |
| முறிவு தறிவு | 2321 |
| கண் நோய் | 632 |
| சர்ம ரோகம் | 543 |
| கட்டி புண் | 372 |
| விசர் நாய்க் கடி | 183 |
| அக்கினி புண் | 83 |
| மன நோய் | 160 |
| | 07 |
| ஏனையன | 658 |
| யாணை வைத்திய முறை | 05 |
| முழுத் தொகை (சர்வாங்க / விசேட) | 21510 |
| விபரம் அறிந்துகொள்ள முடியாத வைத்தியர்களின் வைத்தியர்களின் எண்ணிக்கை | 2544 |
| மொத்த தொகை (சர்வாங்க/ விசேட/ இறந்த) | 24054 |
| இறந்துள்ள வைத்தியர்களின் எண்ணிக்கை | 3001 |

## 06. ஆயுர்வேத தாதியர்கள் மற்றும் ஆயுர்வேத மருந்தாளர்களைப் பதிவு செய்தல்:-

| விடயம் | 2011.12.31 ம் திகதிககு பதிவு செய்யப்பட்ட மொத்த எண்ணிக்கை | 2012 | 2013 | 2014 | பதிவு செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை | பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை | பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை | |
| ஆயுர்வேத தாதியர் | - | 30 | _ | _ | 30 |
| மருந்தாளர் | 125 | 44 | 23 | 20 | 212 |

## 07. "ஹெலவெத ருவநார" :-



மஹிந்த சிந்தனை தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுதேச வைத்திய அமைச்சினால் செயற்படுத்தப்படுகின்ற "ஹெலவெத புனருத" நிகழ்ச்சித் திட்டத்திற்கு சமாந்திரமாக ஆயுர்வேத வைத்திய சபையினால் வழிநடத்தப்படுகின்ற "ஹெலவெத ருவநார" ஆயுர்வேத வைத்திய சபையினால் நடாத்தப்பட்டது.
அதனடிப்படையில்,

1. ஆயுர்வேத மருத்துவ சேவையின் நடமாடும் சேவை கரும்படத்தில் பின்வரும் பணிகள் கவனிக்கப்படுகின்றன.
   - பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவர்களினைப் பதிவு செய்தல் பொருட்டு விண்ணப்பங்களினை வழங்குதல்.
   - பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியர்களின் விண்ணப்பங்களினைப் பெற்றுக்கொள்ளுதல்.
   - கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களின் குறைபாடுகளினைத் திருத்துதல்.
   - பதிவினை எதிர்பார்கின்றவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்தல்.

- ஆயுர்வேத மருத்துவச் சான்றிதழ் புத்தகங்களினை வழங்குதல்.
- பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களுக்கு வாகனச் சின்னங்களை விநியோகித்தல்.
- பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களுக்கு வைத்திய அடையாள அட்டை விநியோகித்தல்.
- பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களின் விபரங்களை நாளது வரையாக்கம் செய்தல்.

2. பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவர்களை பதிவு செய்யும் பொருட்டு நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல்.
3. பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களின் பொருட்டு தொழிசார் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினை செயற்படுத்தல்.
4. "வைத்தியர்களை ஹெலவெத ராகவர்ண" ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிக்காதவர்களை பங்களிக்கச் செய்தல்.
5. தொழில்சார் அபிவிருத்திக்காக பிரசாரங்களை நடாத்துதல்.

## 2010 தொடக்கம் 2014 வரை நடாத்தப்பட்ட "ஹெல வெத ருவநாற" நிகழ்ச்சி தொடர்பான அறிக்கை.

| விடயம் | 2010 ஆண்டு | 2011 ஆண்டு | 2012 ஆண்டு | 2013 ஆண்டு | 2014 ஆண்டு |
|---|---|---|---|---|---|
| வருடாந்தம் நடாத்தப்பட்ட தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் எண்ணிக்கை. | 03 | 04 | 04 | 02 | 01 |


| திகதி | இடம் | பங்குபற்றியவர்கள் |
|---|---|---|
| 2014.07.24,25,26 | Ayur Ex Kandy – 2014 சர்வதேச கல்வி மற்றும் கண்காட்சி | 438 |



## 08. <u>ஆயுர்வேத வைத்திய சபையின் வலையமைப்பு</u>

அரச பிரிவைப் போன்று வர்த்தகப் பிரிவுகளில் உள்ளவர்களும் ஆயுர்வேத வைத்தியர்கள் தொடர்பாக விசேட அவதானத்தை செலுத்தியுள்ள இக்காலகட்டத்தில் இப்பணியை இலேசாக்கும் பொருட்டும் ஆயுர்வேத வைத்தியப் துறையின் நலனுக்காக மற்றும் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவினை எதிர்பார்த்துள்ள வைத்தியர்களுக்கான

வழிகாட்டல்கள், சட்ட விதிகள், மற்றும் ஏனைய சட்ட திட்டங்கள் அரச பிரிவைப் போன்று வர்த்தகப் பிரிவினரின் அவசியங்களிற்கு ஏற்ப இதனூடாக வெளியிடுவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது. நாளது வறையாக்கம் செய்யப்பட்ட சகல வைத்தியர்களினதும் விரங்கள் www.ayurvedicmedicoun.gov.lk உத்தியோக பூர்வ வலையமைப்பு இணையத்தளத்தில் விடுவிக்கப்பட்டது.




## 9. 2014 ம் ஆண்டில் ஆயுர்வேத வைத்திய சபையினால் எடுக்கப்பட்ட மற்றும் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களுக்கு இணங்க நடைமுறைப்படுத்தப்பட்ட ஏனைய நடவடிக்கைகள்.

1. 1961 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் 81 ம் பிரிவின் பிரகாரம் பிறப்பு இறப்பு பதிவாளரினால் இறந்துள்ளார் என உறுதி செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களின் பெயர்கள் பதிவேட்டில் இருந்து அகற்றுதல்.

| விபரம் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| **இறந்துளளார்கள் என அறிவிக்கப்பட்ட வைத்தியர்களின் எண்ணிக்கை.** | 27 | 27 | 19 | 100 | 67 |

2. அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களிற்கு 2013 ஆண்டில் ஆயுர்வேத வைத்தியர்களினால் வழங்கப்படுகின்ற வைத்திய சான்றிதழ்கள் உறுதி செய்தல்.

| விபரம் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| **உறுதி செய்யப்பட்ட வைத்திய சான்றிதழ்களின் எண்ணிக்கை.** | 355 | 250 | 222 | 280 | 1057 |

ஒவ்வொரு அரச நிறுவனங்களில் கணக்காய்வு விசாரணையின் ஊடாக வழங்கப்பட்டுள்ள விபரங்களுக்கு இணங்க பொய்யான வைத்திய சான்றிதழ்கள் வழங்கிய சந்தேகத்திற்கு இடமான வைத்தியர்களுக்கு 14 நாட்களுக்கு முன் வைத்திய சபைக்கு காரணங்களை சமர்பிற்குமாறு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு இணங்க எவ்வித பதிலும் அனுப்பத் தவறிய வைத்தியர்களின் வைத்திய சான்றிதழ் ஏற்றுக்கொள்ள மறுக்கப்பட்டு குறிப்பிட்ட நிறுவனங்களிற்கு அறிவூட்டுவதற்கு மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அதன் மூலம் பொலியான வைத்திய சானிறிதழ்கள் வழங்குவதை குறைத்துக்கொள்ள முடிந்துள்ளது.

3. 2013 ம் ஆண்டினுள் பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களுக்கு வைத்திய அடையாள அட்டை வழங்கல்.

| விபரம் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| **விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை.** | 541 | 109 | 671 | 495 | 539 |

4. பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களுக்கு வாகனச் சின்னங்களை விநியோகித்தல்.

| விபரம் | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|
| **விநியோகிக்கப்பட்ட வாகனச் சின்னங்களின் எண்ணிக்கை.** | 335 | 161 | 161 |

5. சுதேச வைத்தியர்கள் தொடர்பான தேசிய நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் புதிதாக பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களுக்கு துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

| விபரம் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| **கலந்துகொண்டவர்கள்** | 117 | 126 | 276 | 136 | 270 |

6. பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களுக்கு வைத்திய சான்றிதழ் புத்தகங்கள் வழஙகல்.

| விபரம் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| **விநியோகிக்கப்பட்ட வைத்திய சான்றிதழ் புத்தகங்களின் எண்ணிக்கை.** | 1517 | 1181 | 1256 | 840 | 1063 |

7. பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களுக்கு சர்வதேச சான்றிதழ் வழங்கல்.

| விபரம் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| **சர்வதேச சான்றிதழினைப் பெற்றுக் கொண்ட எண்ளிக்கை.** | 09 | 14 | 12 | 13 | 11 |

மேற் குறிப்பிடப்பட்ட விடயங்களிற்கு ஆயுர்வேத வைத்திய சபை 2014 ஆம் ஆண்டினுள் அதன் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தது என்பதை நான் இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆயினும் ஆயுர்வேத வைத்திய சபையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாலுள்ள காரணங்கள் நிமித்தமாக ஆயுர்வேத தாதியர்களைப் பதிவு செய்தல், மருந்துக் கலவையாளர்கள் மற்றும் ஆயுர்வேதம் கற்பிக்கும் நிறுவனங்கள் போன்ற பிற செயற்பாடுகளினை எதிர்பாத்தது போல நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லை என்பதையும் இச் செயற்பாடுகளை 2015 ஆம ஆண்டில் நிறைவேற்றிக்கொள்ள கூடிய வகையில் பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதையும் குறிப்பிடுகிறேன்.

பீ.எஸ்.கே.ஆர்.வீரகோன்
ஆயுர்வேத ஆணையாளரும்
ஆயுர்வேத வைத்திய சபைத் தலைவரும்.

2014.08.31 ஆம் திகதி
மஹரகம,நாவின்ன,
பழைய கொட்டாவ வீதியில்,
ஆயுர்வேத வைத்திய சபை அலுவலகத்தில்.

## ஆயுர்வேத வைத்திய சபை

### 2014.12.31 திகதியில் முடிவுற்ற ஆண்டின் பொருட்டான நிதி செயற்திறண் கூற்று

| விபரம் | 2013.12.31 ரூபா | 2014.12.31 ரூபா |
|---|---|---|
| 01. வருமானம் - அரசாங்க ஒதுக்கீடுகள் | 5,000,000.00 | 7,000,000.00 |
| 02.வைத்தியர்களைப் பதிவுசெய்வதற்கான கட்டணம் - குறிப்பு 01 | 4,015,550.00 | 5,041,436.00 |
| 03.ஏனைய வருமானங்கள் | 408,224.00 | 461,908.00 |
| | | |
| **04. மொத்த வருமானம் ( 01 + 02 +03 )** | 9,423,774.00 | 12,503,344.00 |
| | | |
| 05.சாதாரண பொது செலவு - குறிப்பு 03 | 6,969,126.00 | 7,641,362.00 |
| 06.நிதிச் செலவு - குறிப்பு 04 | 69,651.00 | 129,651.00 |
| 07.ஏனைய செலவுகள் - குறிப்பு 05 | 809,727.00 | 1,355,964.00 |
| | | |
| **08.மொத்தச் செலவு ( 05 + 06 + 07)** | 7,848,504.00 | 9,126,977.00 |
| **09.ஆண்டு குறை/ மிகை ( 04 - 08 )** | 1,575,270.00 | 3,376,367.00 |

**மேலே தயாரிக்கப்பட்ட கணக்குக் கூற்று சரியெனவும் மற்றும் அதற்கான கணக்கு வைப்பு சரியாக வைக்கப்பபட்டுள்ளது எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.**

**வைத்தியர் ஆர்.எல்.ரணசிங்க**
பதிவாளர்
ஆயுர்வேத வைத்திய சபை

**பீ.எஸ்.கே.ஆர்.வீரகோன்**
தலைவர்
ஆயுர்வேத வைத்திய சபை

தயாரித்தவர்
**தமித் கலுஆராச்சி**
முகாமைத்துவ உதவியாளர்
ஆயுர்வேத வைத்திய சபை

## குறிப்பு 01

| விபரம் | 2013.12.31<br>ரூபா | 2014.12.31<br>ரூபா |
|---|---|---|
| பதிவுக் கட்டணங்கள் | 1,529,250.00 | 1,982,500.00 |
| நேர்முகப் பரீட்சை கட்டணம் | 294,260.00 | 245,250.00 |
| பதிவு விண்ணப்பப்படிவக் கட்டணங்கள் | 842,285.00 | 1,105,150.00 |
| எழுத்துப் பரீட்சைக் கட்டணங்கள் | 310,700.00 | 356,500.00 |
| வாகன இலட்சினை வழங்குதல் கட்டணம் | 81,400.00 | 149,500.00 |
| சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் தொடர்பான கட்டணங்கள் | 24,000.00 | 55,000.00 |
| தபால் வருமானம் | 67,345.00 | 69,598.00 |
| மருத்துவச் சான்றிதழ் புத்தகங்கள் தொடர்பான கட்டணங்கள் | 311,400.00 | 322,776.00 |
| மருத்துவ அடையாள அட்டைக் கட்டணங்கள் | 406,500.00 | 608,500.00 |
| பெயர் மாற்றங்கள் தொடர்பான கட்டணங்கள் | 15,500.00 | 15,000.00 |
| பெயர் பட்டியல்களில் பிரதி எடுத்தற் கட்டணங்கள் | 26,410.00 | 7,662.00 |
| மேலதிக தகைமைக்கான உள்ளடக்குதல் தொடர்பான கட்டணங்கள் | 11,500.00 | 14,000.00 |
| சர்வதேச சான்றிதழ் பிரதி கட்டணங்கள் | 95,000.00 | 110,000.00 |
| | **4,015,550.00** | **5,041,436.00** |

## குறிப்பு 02

| விபரம் | 2013.12.31<br>ரூபா | 2014.12.31<br>ரூபா |
|---|---|---|
| ஊழியர் கடன்கள் தொடர்பான வட்டி | 49,924.00 | 1,982,500.00 |
| பணிக்கொடை முதலீட்டு வட்டி | 150,465.00 | 54,942.00 |
| நானாவித வருமானம் | 207,835.00 | 282,555.00 |
| | **408,224.00** | **2,319,997.00** |

## குறிப்பு 03

| விபரம் | 2013.12.31<br>ரூபா | 2014.12.31<br>ரூபா |
|---|---|---|
| பதிவியளியினர் சம்பளங்கள் மற்றும் படிகள் | 3,400,346.00 | 3,128,603.00 |
| ஊக்குவிப்புக் கொடுப்பனவு | 331,950.00 | 373,550.00 |
| கணக்காளர் கொடுப்பனவு | | 90,000.00 |
| பதிவாளர் கொடுப்பனவு | | 246,300.00 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 373,842.00 | 367,411.00 |
| ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை. | 93,460.00 | 91,853.00 |
| மருத்துவ அடையாள அட்டைக் கட்டணங்கள் | 52,958.00 | 88,183.00 |
| எழுதுகருவிச் செலவினங்கள் | 137,572.00 | 220,095.00 |
| நேர்முகப் பரீட்சைக் குழுக் கட்டணங்கள் | 283,500.00 | 326,550.00 |
| வைத்திய சபைக் கூட்டங்கள் பொருட்டான செலவினங்கள் | 508,000.00 | 485,800.00 |
| மேலதிக நேரச் செலவுகள் | 273,144.00 | 463,076.00 |
| சலுகையிலான புகையிரத ஆணைச்சீட்டுகள் | 42,270.00 | 39,170.00 |
| உபகுழு படிகள் | 59,200.00 | 89,750.00 |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 77,531.00 | 119,034.00 |

| | | |
|---|---|---|
| புகையிரத ஆணைச்சீட்டு | 19,825.00 | 5,050.00 |
| பணிக்கொடை படிகள் | 255,267.00 | 245,340.00 |
| அச்சடிப்புக் கட்டணங்கள் | 254,687.00 | 111,586.00 |
| விளம்பரப்படுத்தற் கட்டணங்கள் | 82,880.00 | 18,592.00 |
| எழுத்துப் பரீட்சைக் கட்டணங்கள் | 253,675.00 | 281,272.00 |
| "காப்" சேவையின் பொருட்டான கட்டணங்கள் | 235,700.00 | 576,044.00 |
| நீர் கட்டணம் | | 18,050.00 |
| அலுவலகர் பயிற்சிக் கட்டணங்கள் | 106,350.00 | 100,000.00 |
| மின்சாரக் கட்டணங்கள் | 126,969.00 | 156,053.00 |
| | **6,969,126.00** | **7,641,362.00** |

## குறிப்பு 04

| விபரம் | 2013.12.31 | 2014.12.31 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கணக்காய்வுக் கட்டணம் | 60,000.00 | 120,000.00 |
| காப்புறுதிக் கட்டணம் | 9,651.00 | 9,651.00 |
| | **69,651.00** | **129,651.00** |

## குறிப்பு 05

| விபரம் | 2013.12.31 | 2014.12.31 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| ஏனைய செலவுகள் | 95,755.00 | 116,521.00 |
| பயணச் செலவுகள் | 33,849.00 | 55,594.00 |
| தபாற் கட்டணம் | 141,455.00 | 133,905.00 |
| உபசாரக் கட்டணம் | 121,723.00 | 180,688.00 |
| புதினப் பத்திரிகைக் கட்டணம் | 27,560.00 | 27,445.00 |
| காரியால உபகரணங்கள் திருத்திங்கள் | 98,798.00 | 221,661.00 |
| வருடாந்த திறண்ட பெறுமானத் தேய்வு | 290,587.00 | 620,150.00 |
| | **809,727.00** | **1,355,964.00** |

## ஆயுர்வேத வைத்திய சபை

## 2014.12.31 திகதிக்கு நிதி உள்ளவாறான கூற்று

| சொத்து | 2013.12.31 ரூபா | | 2014.12.31 ரூபா | |
|---|---|---|---|---|
| **நடைமுறைச் சொத்து** | | | | |
| காசு மீதி | 234,523.00 | | 3,023,685.00 | |
| பதவியணியினர் கடன் | 1,314,914.00 | | 1,259,191.00 | |
| வைத்திய சான்றிதழ் புத்தக கணக்கு | 480,000.00 | | 428,976.00 | |
| காகிதாதிகள் கையிருப்பு | 274,938.00 | | 269,698.00 | |
| தபால் முத்திரை கையிருப்பு | 138,670.00 | | 84,765.00 | |
| எதிர்வரும் ஆண்டின் பொருட்டான காரியால உபகரணங்கள் | 10,812.00 | | 11,688.00 | |
| | | **2,453,857.00** | | **5,078,003.00** |
| **நடைமுறையில்லாத சொத்து** | | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் (கொள்விலை) | 4,121,902.00 | | 5,922,096.00 | |
| திறண்ட பெறுமானத் தேய்வு | 2,647,330.00 | | 3,267,480.00 | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் (தேறிய பெறுமதி) | | **1,474,572.00** | | **2,654,616.00** |
| **ஏனைய நிதியற்ற சொத்துக்கள்** | | | | |
| பணிக்கொடை கொடுப்னைவு முதலீடு | | **1,423,470.00** | | **1,668,810.00** |
| **மொத்தச் சொத்து** | | **5,351,899.00** | | 9,401,429.00 |
| **பொறுப்புக்கள்** | | | | |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | | |
| கணக்காய்வுக் கட்டணம் | 120,000.00 | | 240,000.00 | |
| தொலைபேசிக் கட்டணம் | 8,015.00 | | 6,466.00 | |
| புதினப் பத்திரிகைக் கட்டணம் | 2,380.00 | | 2,280.00 | |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 10,870.00 | | 40,660.00 | |
| ஏனைய செலவுகள் | 2,399.00 | | 6,512.00 | |
| முன்னைய ஆண்டிற்கான பதிவுக் கட்டணம் | 21,500.00 | | | |
| செலுத்த வேண்டிய பதிவாளர் கொடுப்பனவு | | | 369,450.00 | |
| மின்சாரக் கட்டணம் | 10,103.00 | | 18,268.00 | |
| பதவியணியினர் வேதனம் | 1,069.00 | | 4,562.00 | |
| நீர் கட்டணம் | | | 3,150.00 | |
| ஊக்குவிப்புக் கொடுப்பனவுப் படி | 19,800.00 | | 58950 | |
| புகையிரத ஆணைச்சீட்டு | 7,465.00 | | 4,455.00 | |
| | | **203,601.00** | | **754,753.00** |

| | | | | |
|---|---|---|---|---|
| **நடைமுறையில்லாத பொறுப்புக்கள்** | | | | |
| பணிக்கொடைக் கொடுப்பனவு ஒதுக்கீடு | | 1,423,470.00 | | 1,668,810.00 |
| மொத்த பொறுப்புக்கள் | | 1,627,071.00 | | 2,423,563.00 |
| **தேறிய சொத்து** | | 3,724,828.00 | | 6,977,866.00 |
| தேறிய உரிமையாண்மைகளும் பொறுப்புக்களும் | | | | |
| மூலதன மற்றும் ஒதுக்கம் | 2,385,073.00 | | 3,837,013.00 | |
| திரண்ட குறை / மிகை | 1,575,270.00 | | 3,376,368.00 | |
| | 3,960,343.00 | | 7,213,381.00 | |
| **குறைக்கப்பட்டது / கூட்டப்பட்டது** | | | | |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் | 235,515.00 | | 235,515.00 | |
| | | - | | - |
| **மொத்த உரிமையாண்மைகளும் பொறுப்பக்களும்** | | 3,724,828.00 | | 6,977,866.00 |

**மேலே தயாரிக்கப்பட்ட கணக்குக் கூற்று சரியெனவும் மற்றும் அதற்கான கணக்கு வைப்பு சரியாக வைக்கப்பபட்டுள்ளது எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.**

**வைத்தியர் ஆர்.எல்.ரணசிங்க**
பதிவாளர்
ஆயுர்வேத வைத்திய சபை

**பீ.எஸ்.கே.ஆர்.வீரகோன்**
தலைவர்
ஆயுர்வேத வைத்திய சபை

தயாரித்தவர்
**தமித் களுஆராச்சி**
முகாமைத்துவ உதவியாளர்
ஆயுர்வேத வைத்திய சபை

# ஆயுர்வேத வைத்திய சபை

## 2014.12.31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று

| | 2013 ஆண்டு | | | 2014 ஆண்டு | | |
|---|---|---|---|---|---|---|
| | கழிப்பனவுகள் | கழிப்பனவுகள் | | கழிப்பனவுகள் | கழிப்பனவுகள் | |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **தொழிற்பாட்டு முயற்சிகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட வருமானம்** | | | | | | |
| வட்டி வருமானத்திற்கு முன்னரான மிகை | | | 1,575,270.00 | | | 3,376,368.00 |
| **நிதி அசைவிற்கு தாக்கமளிக்காத விடயங்கள் சீராக்கல்** | | | | | | |
| பதவியணியினர் கடன் மீதான வட்டி | 49,924.00 | | | 54,942.00 | | |
| பணிக்கொடை முதலீட்டு வட்டி | 150,465.00 | | | 124,411.00 | | |
| வருடார்ந்த தேய்மானம் | | 290,587.00 | | | 620,150.00 | |
| ஒதுக்க மாற்றம் | 8,265.00 | | | 123,330.00 | | |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் | 235,515.00 | | | | | |
| ஓய்வூதிய பணிக்கொட்டகள் பொருட்டான ஏற்பாடுகள் | | 255,267.00 | | | 245,340.00 | |
| | 444,169.00 | 545,854.00 | 101,685.00 | 302,683.00 | 865,490.00 | 562,807.00 |
| **தொழிற்பாட்டு மூலதனச் செலவுக் குறிமீடுகளின் மாற்றத்திற்கு முன்னர் தொழிற்பாட்டு மிகைகள்** | | | 1,676,955.00 | | | 3,939,175.00 |
| **தொழிற்பாட்டு மூலதனச் செலவுக் குறிமீடுகளின் மாற்றங்கள்** | | | | | | |
| கடன்பட்டோர் | 477,314.00 | | | | 55,723.00 | |
| இருப்பு (காகிதாதிகள்) | 99,288.00 | | | | 5,240.00 | |
| தபால் முத்திரைக் கையிருப்பு | 108,545.00 | | | | 53,905.00 | |
| வைத்திய சான்றிதழ் புத்தக கையிருப்பு | 480,000.00 | | | | 51,024.00 | |
| கணக்காய்வுக் கட்டணம் | | 57,792.00 | | | 120,000.00 | |
| அட்டுற்ற தொலைபேசிக் கட்டணங்கள் | | 3,299.00 | | 1,549.00 | | |
| அட்டுற்ற ஏனைய கட்டணங்கள் | | 2,399.00 | | | 4,113.00 | |
| எதிர்வரும் ஆண்டின் பொருட்டான அலுவலக உபகரண | 10,812.00 | | | 876.00 | | |
| அட்டுற்ற நீர்க் கட்டணம் | | | | | 3,150.00 | |
| அட்டுற்ற புதினப் பத்திரிகை கட்டணம் | 100.00 | | | 100.00 | | |
| அட்டுற்ற மேலதிக நேர கொடுப்பனவு | 4,226.00 | | | | 29,790.00 | |
| அட்டுற்ற புகையிரத ஆணைச்சீட்டுக் கட்டணம் | | 1,085.00 | | 3,010.00 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அட்டுற்ற எழுத்துப் பரீட்சைக் கட்டணம் | | | | | | |
| அட்டுற்ற ஊக்குவிப்புக் கொடுப்பனவுப் படி | | 19,800.00 | | | 39,150.00 | |
| அட்டுற்ற பதவியணியினர் வேதனம் | 7,931.00 | | | | 3,493.00 | |
| அட்டுற்ற அடையாள அட்டைக் கட்டணம் | | | | | | |
| எதிர்வரும் ஆண்டின் பொருட்டான பதிவுக் கட்டணம் | 31,500.00 | | | 21,500.00 | | |
| அட்டுற்ற மின்சாரக் கட்டணம் | | 2,039.00 | | | 8,165.00 | |
| அட்டுற்ற பதிவாளர் கட்டணம் | | | | | 369,450.00 | |
| விளம்பரக் கட்டணம் | 78,400.00 | | | | | |
| | 1,298,116.00 | 86,414.00 | **(1,211,702.00)** | 27,035.00 | 743,203.00 | **716,168.00** |
| **தொழிற்பாட்டு முயற்சிகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல்** | | | **465,253.00** | | | **4,655,343.00** |
| **முதலீட்டு முயற்சிகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல்** | | | | | | |
| நிலையான சொத்துக்களின் கொள்வனவு | 197,960.00 | | | 1,800,194.00 | | |
| பணிக்கொடை முதலீட்டு வட்டி | | 150,465.00 | | | 124,411.00 | |
| பணிக்கொடைப் படி | 255,267.00 | | | 245,340.00 | | |
| | 453,227.00 | 150,465.00 | **(302,762.00)** | 2,045,534.00 | 124,411.00 | (1,921,123.00) |
| **காசுக்குச் சமமான செலவுக் குறிமீடுகளின் கழிப்பனவு** | | | **162,491.00** | | | **2,734,220.00** |
| **நிதி முயற்சிகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல்** | | | | | | |
| பதவியணியினர் கடன்கள் மீதான வட்டி | | | **49,924.00** | | | **54,942.00** |
| | | | **212,415.00** | | | **2,789,162.00** |
| **வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமான குறிமீடுகள்** | | | | | | |
| வங்கிக் கணக்கு | | | **22,108.00** | | | **234,523.00** |
| வருட இறுதியில் முழுக் காசுப் பாய்ச்சல் | | | **234,523.00** | | | **3,023,685.00** |
| **வருட இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமான குறிமீடுகள்** | | | | | | |
| வங்கிக் கணக்கு | | | **234,523.00** | | | **3,023,685.00** |
| **வருட இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமான குறிமீடுகள் கழிப்பனவுகளும்** | | | **234,523.00** | | | **3,023,685.00** |

**மேலே தயாரிக்கப்பட்ட கணக்குக் கூற்று சரியெனவும் மற்றும் அதற்கான கணக்கு வைப்பு சரியாக வைக்கப்பபட்டுள்ளது எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.**

**தயாரித்தவர் :- தமித்களுஆராச்சி**

**முகாமைத்துவ உதவியாளர் :- ஆயுர்வேத வைத்திய சபை**

මගේ අංකය / எனது இல. / My No. } எச்எம்/சீ/ஏஎம்சீ/1/14/25
ඔබේ අංකය / உமது இல. / Your No. }
දිනය / திகதி / Date } 2016 பெப்ரவரி 10

தலைவர்,

ஆயுர்வேத மருத்துவ சபை

**ஆயுர்வேத மருத்துவ சபையின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

ஆயுர்வேத மருத்துவ சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பகுதியில் 11 – 21 வரையான பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று மருத்துவ சபையின் தலைவருக்கு 2015 செப்தெம்பர் 29 ஆம் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஆயுர்வேத மருத்துவ சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

முன்னைய ஆண்டிலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 235,515 தொகையான இனங்காணப்படாத வரவு மீதியை இனங்கண்டு சரி செய்வதற்குப் பதிலாக உரிமை மூலதனத்தில் கழித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச் சட்டத்தின் 111 ஆவது பகுதியின் 11(1)(உ) பிரிவு | பதிவு செய்துள்ள ஆயுர்வேத வைத்தியர்கள் மூவர் சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டு வரையும் அங்கத்தவர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2005 யூலை 05 ஆம் திகதிய 14/13/08(3) ஆம் இலக்க ஆயுர்வேத மருத்துவ சபை பத்திரம் | ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவு செய்துள்ள சகல வைத்தியர்களும் 05 வருடங்களுக்கு ஒரு தடவை பதிவினை நாளதுவரையாக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 5 வருடங்களை விஞ்சிய 19,528 வைத்தியர்களில் ஒரு வைத்தியர் மாத்திரம் பதிவினை நாளதுவரையாக்கியிருந்தார். சகல வைத்தியர்களும் இதனைப் பின்பற்றக்கூடிய வகையில் பொருத்தமான நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக போலி வைத்தியர்கள் வேலையில் ஈடுபடுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

----------------------------------------------------

| | |
|---|---|
| (i) நிதிப் பிரமாணம் 169(2) | அரசாங்கத்திற்குக் கிடைக்கின்ற காசுக் கட்டளையொன்றிற்காக அதில் குறிப்பிடப்பட்ட மொத்தப் பணமும் தேறும் வரை எந்தச் சேவையும் நிறைவேற்ற முடியாதிருந்த போதிலும் காசுக் கட்டளையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டின் போது ரூபா 33,820 தொகையான சேவை வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப் பிரமாணம் 177(1) | அரசாங்க வருமானத்தின் ஒரு பகுதியாக சேகரிக்கப்படுகின்ற அரசாங்கத்தின் பணம் நாள்தோறும் அல்லது முடியுமானவரை விரைவாக வங்கியிலிடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 110,920 கூட்டுத்தொகையான பணத்தை வங்கியிலிடுவதற்காக 01 வாரம் முதல் 02 வாரங்கள் வரை தாமதிக்கப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. |
| (ஈ) 2013 யூன் 04 ஆம் திகதிய டீஎம்எஸ்/ஈ3/38/4/241/1-(கூறு)1 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | மருத்துவ சபையின் பதவியணியினரில் ஒரு உத்தியோகத்தருக்கு மாதத்திற்கு ஆகக்கூடியது ரூபா 1,800 இன் கீழ் ஊக்குவிப்புப் படிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அந்த எல்லையினை விஞ்சி 10 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 148,300 தொகையான ஊக்குவிப்புப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |

3. நிதி மீளாய்வு

---

3.1 நிதி விளைவுகள்

---

மீளாய்வாண்டின் போது சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 3,376,367 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,575,270 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,801,097 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அரசாங்கத்தின் நிதியேற்பாடு 40 சதவீதம் அல்லது ரூபா 2,000,000 இனால் அதிகரித்தமை நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு பிரதான தாக்கமளித்திருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

---

4.1 செயலாற்றல்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வைத்திய சபையினால் மீளாய்வாண்டின் போது 08 தங்கப் பதக்கங்களை கையளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் எந்த நிகழ்ச்சித்திட்டமும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டிலும் பதிவுசெய்யப்பட்ட மருத்துவர்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வைத்தியர்கள் | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|---|
| பட்டதாரிகள் | 132 | 137 | 135 | 162 | 161 |
| டிப்ளோமாதாரிகள் | 54 | 76 | 95 | 89 | 91 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாரம்பரிய | 86 | 45 | 45 | 30 | 75 |
| பாரம்பரிய விசேட | 178 | 90 | 85 | 68 | 148 |
| | --------- | --------- | --------- | --------- | --------- |
| | 450 | 348 | 360 | 349 | 475 |
| | ==== | ==== | ==== | ==== | ==== |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2012 ஆம் ஆண்டு முதல் டிப்ளோமா வைத்தியர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைவடைந்திருந்ததுடன் 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது டிப்ளோமா வைத்தியர்களின் எண்ணிக்கை 22 இனால் அல்லது 29 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(இ) மீளாய்வாய்வாண்டின் போது வைத்திய சபைக்குக் கிடைத்த 39 முறைப்பாடுகளில் 23 மாத்திரம் விசாரணை செய்யப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

நிதிரீதியான பெறுமதியுடனான சான்றிதழ் மற்றும் விண்ணப்பங்கள் இருப்பொன்றைப் பேணுதல் மற்றும் விற்பனைகளின் அளவு தொடர்பாக உரியவாறான உள்ளகக் கட்டுப்பாடொன்று பேணப்படாதிருந்துடன் புத்தகங்கள், ஏடுகள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகளில் காண்பிக்கப்பட்ட விற்பனை அளவு என்பவற்றுக்கிடையே கவனத்திற்கொள்ளக்கூடிய வேறுபாடுகள் காணப்பட்டது. மேலும் 2015 செப்தெம்பர் 18 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக இருப்பு பரிசோதனையின் போது மொத்தப் பெறுமதி ரூபா 22,400 தொகையான 64 வைத்திய சான்றிதழ் புத்தகங்களின் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது.

## 4.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

வருடாந்த சராசரி விற்பனை 1,000 புத்தகங்களாகக் காணப்பட்ட போது தேவைகளை இனங்காணாது 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 480,000 தொகை செலவில் 10,000 வைத்தியச் சான்றிதழ் புத்தகங்கள் அச்சிடப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் 8,458 பத்தகங்கள் எஞ்சியிருந்தமையினால் எதிர்வரும் 08 வருடங்களுக்குத் தேவையான புத்தகங்களுக்காக பணம் செலவிடப்பட்டிருந்ததுடன் நீண்ட காலம் செல்லும் போது அந்த புத்தகங்கள் விற்பனைக்குத் தகுதியான நிலையில் காணப்படுமா என கணக்காய்வில் கேள்விக்குரியதாக இருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின்படி நியதிச்சட்ட சபையினால் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இலங்கை ஆயுர்வேத வைத்திய சபையின் 2014 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 6 மாத கால தாமதத்துடன் 2015 செப்தெம்பர் 11 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றவேண்டிய 08 செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்கள சுற்றுநிருபத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவு தாபிக்கப்படாதிருந்ததுடன் ஆயர்வேதத் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் மூலமேனும் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5.4 கணக்காய்வுக் குழு

2010 திசெம்பர் 14 ஆந் திகதிய 55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

---

மீளாய்வாண்டின் செலவினத்தை பாதிடப்பட்ட செலவினங்களுடன் ஒப்பீடு செய்த போது 4 சதவீதம் முதல் 84 சதவீதம் வரை முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5.6 ஆண்டறிக்கையினை சபையில் சமர்ப்பித்தல்**

---

வைத்திய சபையின் 2013 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை 2015 செப்தெம்பர் 18 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது ஆயுர்வேத மருத்துவ சபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) விற்பனைக் கட்டுப்பாடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

ஒப்பம்:- எச்.எம்.காமினி விஜேசிங்ஹ

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## கூட்டுத்தாபன விபரங்கள்

**பெயர் :-**

ஆயுர்வேத வைத்திய சபை

நியதிச்சட்ட விபரம் :-

1927 ஆண்டின் தேசிய அரசுப் பேரவை துணைச் சபை விதந்துரைப்பின் பேரில் 1928 இல் ஸ்தாபிக்கப்பட்ட சுதேச வைத்திய சபை இலங்கை ஆயுர்வேத வரலாற்றில் முதற் சட்ட முறை ஆட்சி உரிமை கொண்ட நிருவனமானது. பின் 1935 இன் 46 ஆம் இலக்க லங்காயுர்வேத வைத்திய சாசன சபை கட்டளைச் சட்ட மூலம் அமைக்கப்பட்ட வைத்திய சபை 1941 ம் 17 இலக்க சுதேச வைத்திய கட்டளைச் சட்டத்தின் ( 1945 இன் இலக்க 49 மற்றும் 1949 இன் 49 இலக்க ஊடாக திருத்தப்பட்ட) கீழ் மீள் நிர்மானிக்கப்பட்டது. தற்போது நடைமுறையிலுள்ள ஆயுர்வேத வைத்திய சபை 1961 ஆண்டின் 31 ம் இலக்க ஆபுர்வேதச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பபட்ட நியதிச்சட்ட நிறுவனமாகும்.

**வங்கியாளர் :-**

இலங்கை வங்கி (பிரதான வங்கியாளர்)
மஹரகம.

தேசிய சேமிப்பு வங்கி
“இதுரும் நிவச”
பிரதான காரியாலயம்,
கொல்லுப்பிட்டி.

**கணக்காய்வாளர் :-**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
காணக்காய்வாளர் திணைக்களம்,
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

## நன்றி


கௌரவ சுதேச வைத்திய அமைச்சர் அவர்கள்

கௌரவ சுதேச வைத்திய பிரதி அமைச்சர் அவர்கள்

சுதேச வைத்திய செயலாளர் அவர்கள்

ஆயுர்வேத வைத்திய சபையின் சகல அங்கத்தவர்களும்

சுதேச வைத்திய அமைச்சு

ஆயுர்வேத திணைக்களம்

சுதேச வைத்தியர்கள் தொடர்பான தேசிய நிறுவனம்

பண்டாரநாயக ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம்

மாகாண சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

சகல மாகாண ஆயுர்வேத ஆணையாளர்களும்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

சட்டமா அதிபர் திணைக்களம்

இலங்கை பொலிஸ் திணைக்களம்

சகல தொடர்பாடல் நிறுவனங்கள்

சகல மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள்

சகல பிரதேச ஆயுர்வேத பாதுகாப்புச் சபைகள்

மற்றும்

**ஆயுர்வேத வைத்திய சபை பதவியணியினர்**